விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 362 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 30 சனிக்கிழமை (16.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வட மாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

### வளிமண்டலவியல் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இன்றும் நாளையும் கனமழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைவரும் முன்னாயத்த நடவடிக்கையில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாணத்தில் டெங்கு தொடர்பில் முறைப்பாடளிக்க

### 24 மணி நேர தொலைபேசி சேவை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு 24 மணி நேர தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள வடக்குமாகாண 15

## தோட்டக் கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

### கோப்பாய் மத்தியில் சம்பவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள தோட்டக்கிணறு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கோப்பாய் மத்தி பகுதியைச் சேர்ந்த 15

## பெரமுனவின் தலைவராக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போது நடைபெறும் 15

## கிளிநொச்சி, முல்லைத்தீவில் தொடர் மழை

# மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

- பல பிரதேசங்கள் வெள்ளக் காடாக மாறியது.
- ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு.
- பல குளங்களின் வான்கதவுகள் திறப்பு.



(02ஆம் பக்கம் பார்க்க)

### பாலியாறு பெருக்கெடுப்பு

## மன்னாரில் பல பகுதிகள் நீரில் மூழ்கின

(மன்னார்)

மன்னாரில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக கட்டுக்கரை குளம் வான்பாய ஆரம்பித்துள்ளதுடன், பாலியாறு பெருக்கெடுத்ததன் காரணமாக மன்னார் - 15

## வவுனியாவில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, சிதம் 15

## புலிகளின் தலைவர் பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொண்டேன்

### மகிந்த ராஜபக்ஷ பெருமிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொள்ள எந்தவொரு முன்னாள் தலைவரும் முன்வரவில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 02

## சதொசவில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

சதொச நிறுவனம் இன்று முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை 10 அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைத்துள்ளது. 15

## கஜேந்திரகுமாரை வழிமறித்த சிங்களக் குடியேற்றவாசிகள்



### மயிலத்தமடு மேய்ச்சல் தரைக்குச் சென்றபோது சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பை 15

## அனைத்து மாகாணங்களிலும் குற்றங்களை ஒழிப்போம்

### அமைச்சர் டிரான் அலஸ்



(கொழும்பு)

நாட்டின் குற்றப்பக்கத்தை இல்லாதொழிக்கும் இலக்கை கொண்டிருக்கிறேன். அந்த இலக்கை யாரேனும் தடுத்தால் அவர்களைத் தாக்குவேன் என 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரித்தானியாவில் கோர விபத்து இலங்கையர் பலி



பிரித்தானியாவில் இடம்பெற்ற விபத்தில் இலங்கை இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிரித்தானியாவிலுள்ள Nottingham Trent பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்காக சென்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த ஒகஸ்ட் மாதம் பிரித்தானியா சென்றுள்ளார் என தெரியவந்துள்ளது.

ஓஷத ஜயசுந்தர என்ற 31 வயதுடைய இலங்கை இளைஞர் கடந்த இருநாட்களுக்கு முன்தினம் இடம்பெற்ற குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

இவர் கண்டி திரித்துவக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மக்களின்...

கிளிநொச்சியில் பெய்த கடும் மழை காரணமாக பாடசாலைகள் மற்றும் பொது மக்க ளின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிப் புகுள்ளாகியுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம், புளியம்பொக்கணை ஆகிய பகுதிகள் மழை வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் தமது இருப்பிடங்களை விட்டு அயலவர் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளது மாத்திரமல்லாமல் ஒரு சிலர் எங்கு செல்வது என்று தெரியாமல் நிர்க்கதியான நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று தர்மபுரம் மத்திய கல்லூரி மற்றும் தருமபுரம் இலக்கம் ஒன்று பாடசாலைகளுக்குள் மழைநீர் உட்புகுந்துள்ளது.

இதனால் நேற்று குறித்த பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகள் தொடர்பாக கிராம சேவையாளர்கள் இப் பகுதிக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை சேகரித்து வருகின்றனர் மேலும்.

முல்லைத்தீவில் தொடர்ச்சியான மழையினால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அதன்படி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களில் வெள்ளப்பாதிப்புக்களை மக்கள் எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மக்களின் வீடுகளும் வயல் நிலங்களும் வெள்ளநீரினால் மூழ்கியுள்ளதுடன் பண்டாரவன்னி கிராமத்திற்கு செல்லும் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மக்கள் வெளியேற முடியாத நிலைக்குள்ளானதாக குறிப்பிடப்படுகிறது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய தகவலின் படி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 115 குடும்பங்களை சேர்ந்த 379 பேரும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 28 குடும்பங்களை சேர்ந்த 87 பேரும் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 39 குடும்பங்களை சேர்ந்த 107 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று மழைவீழ்ச்சி சற்று குறைந்தமையினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கையில் அரச திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வவுனிக்குள பிரதேசத்தில் 208 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஜயன்கன்குளம் பிரதேசத்தில் 179 மி.மீ. மழைவீழ்ச்சியும், அம்பலப்பெருமாள் குளத்தில்173 மி.மீ.மழைவீழ்ச்சியும், கல்விளான்குளத்தில் 200 மி.மீ மழைவீழ்ச்சியும்,மல்லாவிகுளத்தில் 168 மி.மீ மழைவீழ்ச்சியும்,பனங்காமம் பிரதேசத்தில் 225 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

*(மேலும் தொடர்புடைய செய்தி உள்ளே )*

## புலிகளின்...

எனினும், தமது ஆட்சிக்காலத்தின் பின்னரான காலப்பகுதியில், இலங்கையை ஆட்சிசெய்த வேறு எந்தவொரு தலைவரும் யுத்தத்தை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே, அவர் இதனை கூறியுள்ளார்.

இதன் போது மேலும் தெரிவிக்கையில், "இலங்கையை கடந்த 2005 ஆம் ஆண்டு நான் ஏற்றுக் கொள்ளும் போதும் எமது கட்சி மீது பலர் சேறு பூசினார்கள்.

எனினும், நாடு இர்ண்டாக பிளவு படுவதை தடுக்குமாறு மாத்திரமே அன்று மக்கள் எம்மிடம் கோரினார்கள்.

30 வருட யுத்தத்தில், தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை எந்தவொரு தலைவராலும் எதிர்கொள்ள முடியவில்லை.

சில தலைவர்கள் யுத்தத்தை நிறுத்துமாறு கோரி பிரபாகரனுக்கு ஆயுதங்களையும் வழங்கினார்கள்.

அந்த தலைவர் யாரென நான் கூற மாட்டேன். இவ்வாறான யுத்தத்தை சிறிலங்காவின் மற்றுமொரு தலைவர் எதிர்நோக்கும் நிலையை நாம் உருவாக்கவில்லை.

சிங்கள, தமிழ், முஸ்லீம் உள்ளிட்ட அனைத்து மக்களும் சமாதானமாக வாழக்கூடிய நிலையை நாம் ஏற்படுத்தினோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போது, குழந்தைகளாக இருந்தவர்கள், தற்போது யுத்தம் என்றால் என்ன என்று தெரியாத வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

எனினும், மக்களை ஏமாற்றி தங்கள் அரசியல் நோக்கங்களுக்காக செயல்படும் தரப்பினர் இன்றும் இருக்கிறார்கள்.

இவ்வாறானவர்கள் சர்வதேசத்தின் வலைகளில் சிக்கி, தமது சொந்த நாட்டை பாதிப்படைய செய்கிறார்கள்.

எமது கட்சியின் ஆட்சி காலத்தில் காணப்பட்ட பொருளாதார நிலை குறித்து தற்போதும் பலர் கருத்துக்களை முன் வைக்கிறார்கள்.

எம்மை குற்றவாளிகளாக வெளிக்காட்டும் முயற்சிகளில் பலர் ஈடுபடுகிறார்கள்.

2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நாம் நாட்டின் பொருளாதாரத்தை 6 வீதத்தால் வளர்ச்சியடைய செய்திருந்தோம்.

இந்த நிலையில், இலங்கையை சரியான பாதையில் கொண்டு செல்ல சரியானதொரு அரசியல் வழிநடத்தல் தேவை.

சிறிலங்கா பொதுஜன பெரமுன மிக குறுகிய காலத்தில் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை நாட்டை யாருடைய சொந்த தேவைக்காகவும் பிளவுபட நாம் இடமளிக்க மாட்டோம்.

அனைத்து சவால்களையும் எதிர்நோக்கக்கூடிய ஒரே நாடு இலங்கை என்பதை சொல்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

எமக்குள்ள மக்கள் ஆணையுடன் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் நாம் பங்கெடுப்போம்.

பாரிய வெற்றியையும் அடைவோம். எமது வெற்றி பயணத்தில் பங்கேற்க பல அரசியல் கட்சிகள் ஆர்வமாக காத்திருக்கின்றன" என கூறியுள்ளார். (ம-7)


சேவை நலன் பாராட்டு




யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
அகமகிழ்வுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்
ஆசிரியர் திரு.
கதிரவேல் மகேஸ்வரன்
SLTS I, B.A. Dip in Edu.
சேவைக்காலம் : 1985.11.18 - 2023.12.15
- யாழ்.போதனா வைத்தியசாலை
- பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்
- பிரதேச செயலகம் முல்லைத்தீவு
- ஆசிரியர் - யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரி
- ஆசிரியர் - யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
- ஆசிரியர் - யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

மாணவர்களின் கல்விக் கண் திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் :-
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
பாடசாலைச் சமூகம்
(C-7911)



சேர்.பொன்.இராமநாதன் அவர்களின்
93 ஆவது குருபூசைதின விழா



அன்புடையீர்!
நிகழும் சோபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 30ஆம் நாள் திருவோண நட்சத்திரம் கூடிய இன்று சனிக்கிழமை (16.12.2023)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அத்திவாரமிட்டவரான
**சேர்.பொன். இராமநாதன்** அவர்களின்
93 ஆவது குருபூசைத் தினமாகும்

இதனையொட்டி இன்று காலை 8.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீபார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு விஷேட பூசை நிகழவுள்ளது. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம். காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழக வளவிலுள்ள சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் பல்கலைக்கழக சபா மண்டபத்திலுள்ள (Board Room) அவர்களின் திருவுருவப் படத்திற்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா அவர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை,
இந்து மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.



தாதிய உதவியாளர் பதவிக்கான வெற்றிடம்

தகைமைகள் :
1.தாதியர் கல்லூரி ஒன்றில் தாதிய டிப்ளோமாவை/ ஒரு வருட சான்றிதழை பூரணப்படுத்தி இருத்தல்.
2.முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

கவர்ச்சிகரமான சம்பளத்துடன், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியுடனான உரித்துடமை வழங்கப்படும்.

சுயவிபரக்கோவையை "தலைவர், தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பளை" என்னும் முகவரிக்கு 2023.12.20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு : 077 134 9963
tellicoophospital@gmail.com
(C-7877)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் பாயும் கனகாம்பிகைக்குளம்

(முறிகண்டி)

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் வான் பாய்வதால் 26 குடும்பங்கள் வெள்ள நீரில் சிக்கியுள்ளனர். இரத்தினபுரம் பகுதியில் இவ்வாறு மக்கள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் குடியிருப்புக்களிற்குள்ளும் வெள்ளநீர் சென்றுள்ளது.

(நி-5-100)




# இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டன

## மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்து

(முறிகண்டி)

**வடக்கின் பெரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளது. அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.**



அதிக நீர் வருகை காரணமாக வான்கதவுகள் படிப்படியாக திறக்கப்படும் என நீர்ப்பாசன திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

அந்த வகையில் நேற்று 12 வான் கதவுகள் திறந்து விடப்பட்டது. இதேவேளை இரணைமடுக் குளத்தில் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்களின் படகுகள் சில மாயமாகியுள்ளதுடன், வலைகளும் அடித்து செல்லப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதாலும் குளங்கள் வான்பாய்வதாலும் மக்கள் இடர்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் முன்னெச்சரிக்கை நட்வடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் கிராம சேவையாளர் உள்ளிட்ட கிராமமட்ட உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினரின் உதவிகளை நாடுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி-5-100-316)

### சீரற்ற காலநிலையால்

# கிளிநொச்சி மாவட்டத்தில் 1234 பேர் பாதிப்பு

## மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற வானிலையால் 394 குடும்பங்களை சேர்ந்த 1234 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று காலை 11.30 இற்கு வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில், 54 குடும் பங்களை சேர்ந்த 186 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில், 340 குடும்பங்களை சேர்ந்த 1048 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அப்புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5-100)

# புளுதியாறு குளக்கட்டில் கசிவு கட்டுப்படுத்த நடவடிக்கை



(முறிகண்டி)

கிளிநொச்சி - மாயவனூர் பகுதியில் அமைந்துள்ள புளுதியாறு குளத்தினைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிக மழை காரணமாக குறித்த குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருகிறது. இதேவேளை, கட்டில் ஏற்பட்டுள்ள சிறு கசிவினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினால் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் மண் மூடைகள் மூலம் கட்டினை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-100)

# வெள்ளக்காடாக காட்சியளித்த தருமபுரம், பொக்கணை பகுதிகள்

(தருமபுரம்)

சீரற்ற காலநிலை காரணமாக கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம், புளியம்பொக்கணை ஆகிய பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பலர் தமது இருப்பிடங்களை விட்டு உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


இப்பகுதி தொடர்ச்சியாக வெள்ளக்காடாகவே காட்சி தருகிறது.

அத்துடன் சில பாடசாலைகளுக்கும் நேற்று விடுமுறை வழங்கப்பட்டது. (நி-5-316)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வெற்றிவாகை சூடியது மகாஜனக் கல்லூரி



இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவினருக்கான Tier B இல். மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் கடந்த புதன்கிழமை வவுனியா புதுக்குளம் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மகாஜனக்கல்லூரி அணி வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய அணியை எதிர்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜன 50 ஓவர் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பில் கஜித் 49, ஜோவேல்றொசான் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பாடிய வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் 46.4 ஓவர் களில் சகல இலக்குகளையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் கோகுலநாத் -4, துவாரகன்- 2, கௌதமன்- 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். மகாஜன 73 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கொண்டது. (நி-5-33)

# டோனியின் ஜெர்சி நம்பர் 7 இற்கு ஓய்வு?

இந்திய அணியின் முன்னாள் கப்டன் மகேந்திர சிங்டோனி, 1998 ஆம் ஆண்டு முதல் கிரிக்கெட் போட்டிகளில் பங் கேற்று விளை யாடி வருகிறார். முதல் முதலில் பீகார் அணிக்காகக் களமிறங்கிய அவர், அடுத்து இந்திய அணியில் இடம்பிடித்து பல வரலாற்றுச் சாதனை களை நிகழ்த்தியுள்ளார்.

இந்த நிலையில், மகேந்திரசிங் டோனி கிரிக்கெட்டுக்கு செய்துள்ள பங்களிப்பை கௌரவிக்கும் வகையில், அவரது ஜெர்சி நம்பர் 7 இற்கு பி.சி.சி.ஐ ஓய்வு அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் ஜெர்சி "7" ஐ இந்திய வீரர், வீராங்கனைகள் யாரும் பயன்படுத்த முடியாது. இதற்கு முன்னதாக சச்சினை கௌரவிக்கும் வகையில் அவரது 10 ஆம் நம்பர் ஜெர்சிக்கு 2017 ஆம் ஆண்டு பி.சி.சி.ஐ. ஓய்வு அறிவித் தது குறிப்பிடத்தக்கது.

டோனி தலைமையில் இந்திய அணி இருபது- 20 உலக கோப்பை, 50 ஓவர் உலக கோப்பை, சம்பியன்ஸ் டிராபி ஆகி யவற்றை கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்.பொன்.இராமநாதன் குருபூசை தினம் இன்று

அகில இலங்கை மக்களும் இன.மத பேதமின்றி ஏற்றுக் கொண்ட ஒரே ஒரு தேசியத் தலைவர் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். இவர் பற்றி 'சொக்கன்' "இலங்கைத் தமிழினம் மட்டுமன்றி எல்லா இன மக்களுமே இவர் எம் தலைவர், வழிகாட்டி என்று பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல ஒருவர் இருந்தார் என்றால், அவர் இராமநாதனே யாவார். இலங்கை அன்னையின் ஈடில்லாப் புதல்வர் ஈழ கேசரியான இப்பெருமகனே என்பதை எவருமே மறுக்கார்" எனக் குறிப்பிடுகின்றார். சகோதர இனத்தினரை உளமார நேசித்துப் பரந்த தேசியவாதியாய் விளங்கிய அதேவேளையில் சைவம், தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை உயிர் போன்று பேணியமை மட்டுமன்றி உணவு, உடை, உரையாடல் யாவிலும் அவர் தமிழ்க் கனவான் என்ற பதத்திற்கு முற்றிலும் பொருந்தவே வாழ்ந்து தன் இனத்திற்கு வழிகாட்டினார். புகழையும் இகழையும் ஒன்றுபோற் கருதி மக்கள் பணியே மகேசுரன் பணி எனக் கொண்டு ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம்தேச சேவையாற்றிய மாபெரும் தேசிய வீரர். நியாயவாதித் தொழில் ஒரு புறம், சட்ட நிரூபண சபைக் கருமங்கள் மறுபுறம், சமூகப் பணிகள் இன்னொரு புறம், நூலாக்கம் மற்றொரு புறம் எனத் தமது நீண்ட வாழ்வு முழுவதும் இடைவிடாது பன்முகப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டார்.

சேர்.பொன்.இராமநாதன் சட்ட நிரூபண சபை உறுப்பினராக வருவதற்கு ஆறுமுகநாவலர் பெருமான் காரணமாக இருந்தார். இது பற்றி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை "சேர்.பொன்.இராமநாதன் துரைக்கு அப்போது இருபத்தைந்து வயது. சிரித்த முகம் தங்க சொரூபம் அப்பொழுதுதான் சென்னைப்பட்டணத்திலிருந்து படித்துவிட்டு வந்தவர். யாழ்ப்பாணத்தவரேயாயினும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. யாழ்ப்பாணம் வந்திருக்கின்றார்." என்றும் "ஆறுமுகநாவலரின் ஆசீர்வாதத்தால் சேர்.பொன். இராமநாதன் துரை அன்று தொடக்கம் அரைநூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் சட்ட சபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்" என்றும் குறிப்பிடுகின்றார். எனவே ஆறுமுகநாவலரின் ஆசீர்வாதத்தினால் இராமநாதனின் அரசியல் வாழ்வு ஆன்மிக மயப்பட்டதாக அமைந்திருந்தது எனலாம். இது பற்றி இராமநாதனின் வரலாற்றாசிரியரான வைத்திலிங்கம் "அரசியலை ஆன்மிகமயப்படுத்திய ஒருவர் இராமநாதனுக்கு முன்னும் இருந்ததில்லை பின்னும் இருக்கப்போவதில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று ஓரளவு மிகைப்படுத்தியதாகத் தோன்றினாலும் ஈழத்துத் தலைவர்களுள்ளே அரசியலில் ஆன்மிகத்தைக் கலந்த முன்னோடியும் முதல்வரும் இராமநாதன் என்பதில் ஐயம் இல்லை.

உலகியல் வாழ்விலே தேசியத்தைப் போற்றிய அவர் ஆன்மிகத்திலே முதிர்ந்து கனிந்த வேளையிலே எந்தச் செயலும் பரமேஸ்வரனின் செயலே எனவும் எல்லாம் அவன் தந்தனவே எனவும் கருதி, செயலில் பற்று வையாதும் அதிலே தோயாதும் நிஷ்காமிய கர்மியாய் வாழ்ந்து வந்தார். அமெரிக்காவிற்கு மதபோதக ஆசிரியராய்ச் சென்று ஆங்கிலத்திலே பேருரைகள் நிகழ்த்தியதுடன் "மேற்கு நாடுகளிடையே காணப்படும் ஆன்மிகப் பண்பு" மற்றும் யேசு கிறிஸ்து நாதரின் உபதேசங்கட்கு மேலைத்தேசத்தவர்கள் அளித்த விளக்கத்தினை ஆராய்ந்து 'அவை பற்றிய கீழைத்தேசக் கண்ணோட்டம்' என்ற வியாக்கியான நூல்கள் இரண்டினையும் எழுதியுள்ளார்.

சேர். பொன். இராமநாதன் மதுரைச் செந்தமிழ்ச் சங்க விழாக்கள், சென்னைச் சைவ சித்தாந்த சமாச மகாநாடுகள், திருவள்ளுவர் மகாசபை போன்றவற்றிற்கெல்லாம் தலைமை தாங்கி அரிய தமிழ்ப் பேருரைகளை நிகழ்த்தியுள்ளார். திருக்குறட்பாயிரம் இராமநாத பாஷ்யம், ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம், செந்தமிழ் இலக்கணம் முதலிய தமிழ்நூல்களை அவர் எழுதித் தமிழ்த்தாயை அணி செய்தார். வடமொழிச் சொற்களைப் பெருமளவு கொண்ட தமிழ் உரைநடையினை அவர் எழுதினாலும் அவரின் தமிழ் நடை கம்பீரமும் தெளிவும் எளிமையும் கொண்டது.

அருட்பரானந்த சுவாமிகளைச் சற்குருவாய் கொண்ட இராமநாதனின் தந்தையார் கட்டிய பொன்னம்பலவாணேசர் கோயிலை புனர்நிர்மாணம் செய்து. திராவிடக் கட்டடக் கலைப் பாணியில் கருங்கல் திருப்பணியாய் அமைப்பதிலே ஈடுபட்டதுடன் யாழ்ப்பாணத்துப் பரமேஸ்வராக் கல்லூரியிலே இராமநாதேஸ்வரம் எனும் ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் கோயிலையும் அமைத்தார்.

இராமநாதனின் கல்விப் பணியிலே குறிப்பிடத்தக்கது அவர் நிறுவிய இராமநாதன் மகளிர் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியுமாகும். பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் இலட்சியங்கள் பற்றி இராமநாதன் குறிப்பிடும்போது, "பரமேஸ்வராக் கல்லூரி இந்திய ஞானிகளின் ஞானத்தோடு, தமிழ், சங்கத இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ்ச் சிறுவர்கள் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவெனத் ஸ்தாபிக்கப்பட்டது" என்றார். இராமநாதன் இலங்கையின் வடபாகத்தில் பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என்று கனவு கண்டார். அவரது கனவு பரமேஸ்வராக் கல்லூரி 1974-10-06 தொடக்கம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமாகவும் பின்னர் 1979-01-01 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகவும் தரமுயர்த்தப்பட்ட போது நிறைவேறியதுடன் 2019.03.18 ஆம் ஆண்டு இந்து நாகரிகத்துறை, சமஸ்கிருதத் துறை, சைவசித்தாந்தத் துறை என்பன இணைந்து இந்துக் கற்கைகள் பீடம் நிறுவப்பட்டதுடன் முழுமை பெற்றது எனலாம்.


**கலாநிதி. பொன்னுத்துரை சந்திரசேகரம்,**
**தலைவர், சைவசித்தாந்தத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**




பெருவரத்தால் ஈழத்தாய் பெற்றெடுத்த தவப்
புதல்வனை, தலைமகனை, அரசியல்ஞானியை
மருதநிலவளமும் ஞானிகளும் தெய்வத்திருத்தலங்களும்
மாண்புறு சேவைகளும் நிலைத்த
மருதனார்மடத்தில் சமாதிகொண்ட இராமநாத
வன்றவை பரமஞானியை நாவலர் வழியில்
கருதரிய கல்விப்பணி, சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணிகள்
செய்த மகானை நன்றியுணர்வோடு வணங்குகின்றோம்.

திரி கரண சுத்தியுடன் காரிய சித்தியும் அருள்வாய்
கருணாகரக் கடவுளே என்ற தாரக
திருத்தகு மந்திரத்தை மகுடவாசகமாகப் பொறித்து
இராமநாதன் கல்லூரியைக் கட்டித்தந்த
பெருவள்ளல் பெருந்தகை சேர்.பொன்.இராமநாத
வள்ளலை நெஞ்சகத்திருத்தி வாழ்த்தி
விருப்பொடு மலர்தூவி அர்ச்சித்து வழிபாடு
ஆராதனைகள் செய்து வணங்குகின்றோம்.

**ஆக்கம்**
**பண்டிதை.வை.கணேசப்பிள்ளை.**

# இராசிபலன்

**16.12.2023**
**கார்த்திகை 30, சனிக்கிழமை**
**சதுர்த்தி முன்னிரவு 11.16 மணிவரை**

**உத்தராடம் முற்பகல் 9.31 மணிவரை**
**சுபநேரம் -3.22-4.52 மணிவரை**
**இராகுகாலம்-9.22-10.52 மணிவரை**

**சந்திராஷ்டமம்-திருவாதிரை**
**சதுர்த்தி விரதம்.**

**வளவன்**


மேஷம்
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


கடகம்
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


துலாம்
வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


மகரம்
வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியோர்கள் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம்.


ரிஷபம்
மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், ரோக பயமுண்டு.


சிம்மம்
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிமையான நாள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்
சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.


மிதுனம்
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி
உதிரி வருமானங்கள் பெருகும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


தனுசு
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மீனம்
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**பகைவர்கள்மீது எப்போதும் நம்பிக்கை வைக்காதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை காணி சுவீகரிப்புக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் நேற்று காணி அளவீட்டுக்கு சென்ற நிலஅளவைத் திணைக்களத்தினருக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**





யாழ்.கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் அளவீடு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஒன்று கூடிய காணிஉரிமையாளர்கள் நிலஅளவை திணைக்களத்தினரின் வாகனத்தை மறித்து கோஷங்களை எழுப்பினர்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/226 மற்றும் ஜே/223 கிராம அலுவலர் பிரிவுகளில் முன்னெடுக்க இருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை மக்கள் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

## நினைவுப்பேருரையும் கருத்தாடல் அரங்கும்

(கிளிநொச்சி)

தேசத்தின் குரல் அரசறிவியல் பள்ளி நடத்தும் "வணங்குவோம் வல்லமை சேர்ப்போம்" நினைவுப்பேருரையும் கருத்தாடல் அரங்கு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி, கரடிப் போக்குச் சந்தி, R.S.Green பாரதி மண்டபத்தில் இலங்கை கிளை, கிளிநொச்சி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் அ.சத்தியானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளன. (நி-5-6)

## 6 கிலோ ஆமை இறைச்சியுடன் யாழில் நபரொருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் சுமார் 6 கிலோ ஆமை இறைச்சியுடன் ஒருவர். நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நகர்ப்பகுதியில் நபர் ஒருவர் ஆமை இறைச்சியுடன் நடமாடுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து சோதனையிட்ட போது, அவரது உடைமையில் இருந்து ஆமை இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2991

மகிஷா




நித்தியா




விதுனா




யாழ்தேவ்




வனத்




கைரேஷ்





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள் அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில்

# நீரில் மூழ்கிய பல கிராமங்கள்





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் தொடர்ச்சியான மழையினால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அதன்படி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான்.மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களில் வெள்ளப்பாதிப்புக்களை மக்கள் எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மக்களின் வீடுகளும் வயல் நிலங்களும் வெள்ளநீரினால் மூழ்கியுள்ளதுடன் பண்டார வன்னி கிராமத்திற்கு செல்லும் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மக்கள் வெளியேற முடியாத நிலைக்குள்ளானதாக குறிப்பிடப்படுகிறது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவலின் படி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 379 பேரும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 28 குடும்பங்களை சேர்ந்த 87 பேரும் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 39 குடும்பங்களை சேர்ந்த 107 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1000 | 1200 |
| தக்காளி | 750 | 500 | 550 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 450 | 400 | 400 | 450 |
| கரட் | 400 | 420 | 280 | 480 |
| பூசணி | 200 | 180 | 140 | 200 |
| புடோல் | 300 | 300 | 160 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 400 | 550 |
| பெரிய வெங்காயம் | 450 | 400 | 430 | 450 |
| பாகற்காய் | 800 | 500 | 600 | 600 |
| வெண்டக்காய் | 350 | 250 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 110 | 150 |
| பயற்றங்காய் | 400 | 600 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 380 | 360 | 400 |
| பீற்றூட் | — | 500 | 500 | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 | 600 |
| முருங்கைக்காய் | — | 1800 | 1200 | 2000 |
| போஞ்சி | 350 | 450 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 200 | 250 |
| தேசிக்காய் | 1000 | 800 | 550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 600 | 450 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 200 | 250 | — | 400 |
| பொன்னாங்காணி | 150 | 100 | 200 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 180 | 120 | 200 |

## பாவற்குள நீர்வரத்து அதிகரிப்பு

# 4 வான்கதவுகள் திறப்பு

(குருமன்காடு)

வவுனியா, பாவற் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியை இரவு பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக பாவற்குளம் நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் 4 கதவுகளும் 2 அடி விகிதம் திறக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நெளுக்குளம்- நேரிய குளம் வீதிப்போக்குவரத்து நேற்று முன்தினம் இரவு 8 மணி தொடக்கம் காலை 5 மணி வரை முற்றாக தடைப்பட்டு இருந்தது.

பாவற்குளத்தின் 4 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளமையால் நேரியகுளம் ஊடான நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியில் நீர் பாய்ந்து செல்வதால் பொது மக்கள் குறித்த வீதியை பயன்படுத்துவதை நிறுத்தி மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5-6-250)

## கனமழையால் வெள்ளத்தில் மூழ்கிய வயல் நிலங்கள்



(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கிழக்கு பகுதியில் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின. நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக புதுக்குடியிருப்பு கிழக்கு மல்லிகைத்தீவு கமக்கார அமைப்பின் கீழ் உள்ள நெல் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

பெரும் போக செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வந்த நிலையில் குறித்த வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (நி-5-6-316)

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை-சுன்னாகம்
### ஏலவிற்பனை

எமது சபைக்குரிய 320 வெற்றுத் தார்பரல்கள் **22.12.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமை அலுவலக வளாகத்தில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலதாரராக கலந்து கொள்வோர் அன்றைய தினம் 10.00 மணிக்கு முன்னர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 செலுத்தி தங்களைப் பதிவு செய்வதன் மூலம் ஏலத்தில் பங்குபற்ற முடியும். ஐம்பது பரல்களாக பிரித்து ஏலம் கோரப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். சித்திபெற்ற ஏலதாரர் உரிய தொகையினைச் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை அகற்றுதல் வேண்டும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**திருமதி உ.சாரதா,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
(சி-7909)


விற்பனைக்கு





KORD, KORA
அச்சு இயந்திரங்கள்
விற்பனைக்கு
தொடர்புகளுக்கு
076 097 3121


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# 14 நாடுகளின் உயரிய விருதுகளை பெற்ற பிரதமர் நரேந்திர மோடி



(டில்லி)
கடந்த 2014 முதல், 14 நாடுகளின் உயரிய விருது களை, பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளதாக தக வல்கள் வெளியாகியுள் ளன.

அவ்வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழலுக்கான உயரிய விரு தையும் பெற்றுள்ளதோடு, பிரதமராக பதவியேற்றது முதல், இதுவரை, ஆப்கா னிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ரஷ்யா, மாலைதீவு, பஹ்ரைன், அமெரிக்கா, பூட்டான், பிஜி, எகிப்து, பப்புவா நியூ கினியா உள்ளிட்ட நாடுக ளின் உயரிய விருதுகளை பிரதமர் மோடி பெற்றுள் ளார்.

பிரதமர் மோடிக்கு உய ரிய விருதுகளை வழங்கு வது, இரு தரப்பு, பிராந்திய மற்றும் உலக அளவில், அவரது அரசியல் திறன் மற்றும் தலைமைத்துவத் திற்கான தெளிவான அங்கீ காரமாகும் என பா.ஜ.க வைச் சேர்ந்த வெளியுற வுத்துறை இணை அமை ச்சர் முரளீதரன் தெரிவித் துள்ளார். (நி-5)

# 17 வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து 16 பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்

## வெனிசுவெலாவில் துயரம்

(கராகஸ்)
வெனிசுவெலா நெடுஞ் சாலையில் 17 வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் கொண்டதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெனிசுவெலா நாட்டின் தலைநகர் காரகஸை இணை க்கும் கிரான் மாரிஸ்கர்டி அயாசுசோ நெடுஞ்சாலை யிலேயே இப்பயங்கர விப த்து ஏற்பட்டுள்ளது.

நெடுஞ்சாலையில் அதி வேகமாக சென்றுகொண் டிருந்த லொறி, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மற்ற வாகனங்கள் மீது அடுத் தடுத்து மோதியது.

சுமார் 17 வாகனங்கள் மீது மோதியதில் அந்த வாகனங்கள் சேதமடை ந்ததுடன் தீப்பிடித்து எரிந் தன.

தகவலறிந்த தீயணை ப்பு மற்றும் மீட்புக்குழு சம்பவ இடம் சென்று தீயை அணைத்து மீட்புப் பணிக ளில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்த



தோடு பலர் காயமடைந்து ள்ளனர்.

அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியா னது. (நி-5)

# கேரளாவில் 24 மணிநேரத்தில் 230 கொரோனா தொற்றாளர்கள்

(டில்லி)
24 மணிநேரத்தில் கேரளாவில் கொரோனாத் தொற்றால் 230 பேர் பாதி க்கப்பட்டுள்ளது அதி ர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.


அதாவது 2019 ஆம் ஆண்டு பரவிய கொரோனா வைரஸ் பின்னர் உலகம் முழுவதும் பரவத் தொடங் கியது.

இதனால் உலகம் முழு வதும் 69 லட்சம் பேர் உயிரிழந்தனர். மேலும் 69 கோடிக்கும் அதிக மானோர் பாதிக்கப்பட்ட னர்.

அதற்குத் தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்டு அதன் பாதிப்பு குறைந்த நிலையில் தற் போது சமீபகாலமாக மீண் டும் பாதிப்பு அதிகரித்துள் ளது.

குறிப்பாக, சிங்கப்பூரில் கடந்த ஒரு வாரத்தில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் தொற்று அறிகுறி யுடன் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

குறிப்பாக தமிழகத் தின் அண்டை மாநில மான கேரளாவில் ஒரே நாளில் 230 பேருக்கு கொரோனாத் தொற்று பாதி



ப்பு கண்டறி யப்பட்டுள் ளது.

இதனைத் தொடர்ந்து கேரளாவில் தொற்று எண் ணிக்கை 949 ஆக அதிக ரித்துள்ளது.

நாடு முழுவதும் தற் போது வரை 1091 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேரளாவில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற் றால் தமிழக எல்லை ப்பகுதிகளில் அச்சம் அதிக ரித்துள்ளது. (நி-5)

# எங்களி

# உக்ரை


(மொஸ்கோ) —
எங்களின் இல
அமைதி திரும்ப
தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்ய-உக்ரைன் போர் நீடித்து வருகின்றது.

ஊடகவியலாளர் சந்திப் பொன் றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

உக்ரைனில் மொத்தம் 6 லட்சத்து

# ஐரோப்பிய
# உக்ரைனை உ
## பேச்சுவார்



(கீவ்)
உக்ரைன், மால்டோவா மற் றும் ஜோர்ஜியா ஆகிய நாடுக ளுக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப் புரிமையை வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய் துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநா

# சீன நிலக்கரி சு

(பீஜிங்)
சீனாவின் வடபகுதியின் ஷாங் க்கிசி மாகாணத்தில் உள்ள நில க்கரி சுரங்க வெடிப்பில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நிலக்கரியை சேமித்து வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வின் இலக்கு நிறைவடையும் வரை
# ...ரைனில் அமைதி திரும்பாது

## புடின் சீற்றம்

(...)

**...இலக்கு நிறைவடையும் வரை உக்ரைன் நாட்டில் ...நம்பாது என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடின் ...ளார்.**

17 ஆயிரம் படை வீரர்கள் முகாமிட்டுள்ளனர். எனவே மேலும் படைகளை அணிதிரட்ட வேண்டிய அவசியம் இல்லை. எங்களின் இலக்கு நிறைவடையும் வரை உக்ரைன் நாட்டில் அமைதி திரும்பாது என தெரிவித்தார்.

ரஷ்ய -உக்ரைன் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவி, பொருளாதார ரீதியாக உதவி செய்து வருகிறார்கள்.

அமெரிக்கா இதுவரை 111 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நிதி உதவி செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ரஷ்யா தொடர்ந்து உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. தனது கட்டுப்பாட்டுக்குள் உக்ரைனைக் கொண்டுவர ரஷ்யா தீவிரம் காட்டி வருகிறது.



ஜனாதிபதியாக கடந்த 24 ஆண்டுக்கு மேல் பதவி வகித்து வரும் புடின், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ...ய ஒன்றியத்துக்குள் ...ா உள்வாங்க இணக்கம்

## ...ார்த்தைகள் ஆரம்பம்



...ட்டில் இது தொடர்பான தீர்மானம் ஏகமனதாக உடன்பாடு எட்டப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் சார்லஸ் மைக்கேல் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதை ஹங்கேரி எதிர்த்த போதிலும் இறுதியில் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தாது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய முடிவு குறித்து கருத்து தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி, இந்த முடிவு உக்ரைனுக்கும் முழு ஐரோப்பாவுக்கும் கிடைத்த வெற்றி எனக் கூறியுள்ளார்.

உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதை எதிர்த்தே ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரை ஆரம்பித்தது.

இந்த விடயம் ரஷ்யாவை கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது. உக்ரைன் மீதான போரை ரஷ்யா வரும் நாட்களில் தீவிரப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6)

# மூன்று நாடுகள் இணைந்து தயாரிக்கும் போர் விமானம்



(டோக்கியோ)

ஜப்பான், பிரித்தானியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் இணைந்து புதிய ரக போர் விமானத்தை தயாரிக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

சீனா, ரஷ்யா, வடகொரியா போன்ற நாடுகள் மூலம் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களில் இருந்து தமது நாடுகளைப் பாதுகாக்க இந்தக் கூட்டு முயற்சியை மேற்கொள்வதாக அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆசிய நாடான ஜப்பான் வேறு நாடுகளுடன் இணைந்து இராணுவ உபரகரணங்களை உற்பத்தி செய்வது இதுவே முதல் முறையாகும்.

நாட்டின் வான்வழி பாதுகாப்பை உறுதிப்படுத்த அதிக திறன்கொண்ட போர் விமானங்களை தயாரிப்பது தவிர்க்க முடியாதது என ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் மினாரு கிஷாரா கூறியுள்ளார்.

ஜப்பானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் உருவாகி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த புதிய போர் விமானத்தை உருவாக்குவது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடு தனியாக ஒரு போர் விமானத்தை தயாரிக்க தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவிகள் தேவைப்படும். மூன்று நாடுகளும் இணைந்து இந்தப் போர் விமானத்தை உருவாக்குவது அப்படியான நெருக்கடிகளை குறைக்கிறது எனவும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மிட்சுபிஷி எஃப் - எக்ஸ் என அழைக்கப்படும் இந்த ஜெட் போர் விமானத்தின் தயாரிப்புப் பணிகள் மூன்று நாடுகளில் உள்ள சர்வதேச நிறுவனங்களின் மேற்பார்வையில் நடைபெறும்.


இதற்கு தற்போது ஜப்பான் தலைமை ஏற்றுள்ளதுடன் தலைமைப் பொறுப்பு சுழற்சி முறையில் மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# ...ரி சுரங்கத்தில் விபத்து-மூவர் உயிரிழப்பு

பயன்படுத்தப்படும் பதுங்குக் குழியை நான்கு பேர் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த மீட்புக் குழுவினர் ஒருவரை உயிருடன் மீட்டனர். ஆனால் மூவர் உயிரிழந்தனர்.

நிலக்கரி உற்பத்தி செய்யும் முக்கிய இடமான ஷாங்க்சியில் உள்ள ஹுவாஜின் கோக்கிங் நிலக்கரி நிறுவனத்தில் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து மீட்புப் படையினருடன், பொலிஸார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் முட்டை இறக்குமதி



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து மீண்டும் முட்டையை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக வர்த்தக, மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தியாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"முட்டை விலையை குறைக்குமாறு விடுத்த கோரிக்கையை உற்பத்தியாளர்கள் நிராகரித்துள்ளதால், முட்டை இறக்குமதியை விரைவில் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது."

முட்டை ஒன்றின் விலையை 55 ரூபாய்க்கு கீழ் குறைக்க முடியாது என முட்டை வியாபாரிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 63 வயதில் வைத்தியர்கள் ஓய்வு பெறலாம்

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

அனைத்து வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை தொடர்பில் கடந்த ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து 176 விசேட வைத்திய ஆலோசகர்களால் எழுத்தாணை மனு (ரிட்) தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்கள் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் விக்கும் களு ஆராச்சி ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, அனைத்து வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளது. (நி-5)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பொது அறிவித்தல்-2024

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01.வியாபார உரிம அனுமதிப்பத்திரம் 2024**

இப்பிரதேச நிர்வாக எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் உரிய விண்ணப்பப்படிவத்தினை உரிய உப அலுவலகங்களில் பெற்று 31.03.2024 இற்கு முன்னர் 2024 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளவும். 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**02.சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் 2024**

1533/16 ஆம் இலக்க 25.01.2008 மற்றும் 1534/18 ஆம் இலக்க 01.02.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்டதற்கமைய தொழில் அல்லது வியாபாரத்தை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் மேற் கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை உரிய உப அலுவலகத்தினூடாக கட்டாயமாக பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

**03.வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள், குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்கிறீற் வேலைகளுக்கும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும். மேலும் கட்டடம் அமைக்கப்படும் காணியின் 1/3 பகுதி கட்டாயமாக நிலப்பகுதியாக அமைதல் வேண்டும்.

**04.துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல் 2024**

2024 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி(வளர்ப்பு நாய்கள்) உரிமங்களை 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**05.விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளில் இரு மருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினை செலுத்தி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியினை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய நிறுவனங்களின் விளம்பரங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

**06.மரக்கறி, மீன், இறைச்சிவகைகள் விற்பனை தடை செய்தல்**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 01 KM தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், இறைச்சிவகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளன.

**07.படவரைஞர் பதிவு செய்தல் / புதுப்பித்தல்**

2024 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே படவரைஞராக பதிவு செய்தவர்களும்31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்.

**08.பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09.கழிவகற்றல் சேவை**

தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி சபையின் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றிக்கொள்ள முடியும். மேலும் கழிவுப்பொருட்களில் பிளாஸ்ரிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றினை வேறுபடுத்தி பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட இடத்தில் இடப்பட வேண்டும். உக்கும் கழிவுகளை தாங்களாகவே அகற்றிகொள்ளல் வேண்டும்.

**10.நீர் வழங்கல் சேவை**

பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளுக்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியும்.

**11.கனரக வாகன சேவைகள்**

பக்கோ, கலிபவுசர், றோலர், பொக்கற் லோடர், மல்ரி சொப்பர் போன்ற கனரக வாகன சேவைகள் பெறுவதற்கு, சபையில் சேவைக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**12.பொது சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்/பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்புரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும்.

**13.சந்தை வியாபாரம் தொடர்பானது**

சந்தையில் உற்பத்திப் பொருட்களுக்காக எதுவித கழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை வரியானது 4% இற்கு மேற்படலாகாது. சந்தைச்சுற்றாடல் பகுதியில் துவிச் சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

**14.பொதுவழியின் பயன்பாட்டை இடையூறு செய்யும் வகையில் அலைந்து திரியும் கால்நடைகளை கட்டுப் படுத்தல்.**

பொதுவழி மீது அல்லது பொது வழியின் அருகில் கால் நடைகளை கட்டுதல், அலைந்து திரிகின்ற வகையில் கால்நடைகளை விடுதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான குற்றங்களுக்காக பிடிக்கப்படும் கால்நடைகளை பிடித்தல், பராமரித்தல் செலவுகளுக்காக சபையால் காலத்துக்குகாலம் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களை செலுத்த தவறின் அல்லது கால் நடைகளை உரிமைகோராது விடின் அவ்வாறான கால் நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**15.டெங்குநோயை கட்டுப்படுத்தல்**

எமது பிரதேசத்தில் ஆட்கொல்லி நோயான டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்தும் ஓர் அங்கமாக சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களை துப்புரவாக வைத்திருக்குமாறு அதன் உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். இதனை மீறும் ஆதனங்களின் உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

**16.ஒப்பந்தகாரரை பதிவு செய்தல்**

எமது சபையால் மேற்கொள்ளப்படும் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள் ரூபா 02 மில்லியன் தொகைக்கு உட்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் ரூபா 02 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் எதிர்வரும் 31.01. 2024 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**17.பொலித்தீன் பாவனையை தடைசெய்தல்**

2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் நடைவண்டி மூலம் உணவு விற்பனையில் ஈடுபடுபவர்கள் மேற்படி வர்த்தமானி அறிவுறுத்தலை பின்பற்றுதல் வேண்டும்.

**18.மயானங்களிற்கான தகன அனுமதி பெறல்**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள மயானங்களில் இறுதிக்கிரியைகளை மேற்கொள்பவர்கள் எமது உப அலுவலகத்தில் அனுமதியைப்பெற்று மேற்கொள்ளுதல் வேண்டும்.

**தயானந்தன் தர்சினி,செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,பளை.** (சி-7906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடிக்கு காரணமானோர் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வில் பொதுமக்கள் வலியுறுத்து

**(கொழும்பு)**

**நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச்சுட்டி ஆய்வில் பெரும்பான்மையான பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச்சுட்டி ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு அந்நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப்பிரிவான சமூகக் குறிகாட்டியினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கூறப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமானது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பங்களிப்புச் செய்யும் எனக் கூறக்கூடிய பொருளாதார மற்றும் கொள்கை மறுசீரமைப்புக்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொதுமக்கள் பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை என்றாலும் இந் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளின் விளைவுகளை அவர்கள் தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது" என்று அவ்வறிக்கையில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (நி-5)

## பொதுவேட்பாளராக களமிறங்க தயார் ரொஷான் ரணசிங்க



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாராவது என்னை அழைத்தால் நான் பொதுவேட்பாளராக களமிறங்க பரிசீலிப்பேன் என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தாம் தொடர்ந்தும் சுதந்திரமாக செயற்படுவேன் எனவும் யாராவது நல்ல பிரேரணையை முன்வைத்தால் எதிர்கால அரசியலுக்காக அதுபற்றி சிந்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் மக்கள் நலனுக்காக தொடர்ந்தும் ஊழலுக்கு எதிராக செயற்படுவேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## வெங்காயத்தின் விலை அடுத்த வாரம் குறைவடையும்

(கொழும்பு)

அடுத்த வாரம் நாட்டில் வெங்காயத்தின் விலை குறைவடையும் என வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பண்டிகைக் காலத்தில் வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில் மூன்று மாதங்களுக்கு பெரிய வெங்காயத்தை வழங்குமாறு இந்திய உயர்ஸ்தானிகரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அடுத்த வாரத்திற்குள் நாட்டுக்குத் தேவையான அளவு வெங்காயம் கிடைத்துவிடும் என்பதால் வெங்காயத்தின் விலை குறைவடையும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

### மீண்டும் ஆரம்பமாகும் பொதுமக்கள் தினம்

(கொழும்பு)

பொலிஸ் தலைமையகத்தில் முன்னெடுக்கப்படும் பொதுமக்கள் தினம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கு அமைய, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பொதுமக்கள் தினம் அமுல்படுத்தப்படுகின்றது.

வெள்ளிக்கிழமைகள் தோறும் காலை 9 மணி முதல் பொதுமக்கள் தமது சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசாரணை பிரிவுகளில் ஏற்படும் தேவையற்ற அசௌகரியங்கள், காலதாமதம் உள்ளிட்ட முறைப்பாடுகளை இந்தப் பொதுமக்கள் தினத்தில் பதில் பொலிஸ்மா அதிபரிடம் முன்வைக்க முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

## பேக்கரிப் பொருட்களின் விலையை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் முட்டை, சீனி மற்றும் வெங்காயத்தின் விலையை குறைக்க அரசாங்கம் தலையிடாவிட்டால், பாண் தவிர்ந்த பேக்கரி பொருட்களின் விலை அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பாண் தவிர்ந்த பேக்கரிப் பொருட்களின் விலை பத்து ரூபாவினாலும் கேக் கிலோ ஒன்றின் விலை நூறு ரூபாவினாலும் அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முட்டையின் விலை 60 ரூபாவாகவும் ஒரு கிலோ சீனி 305 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமையே இந்த விலை உயர்விற்குக் காரணம்.

குறிப்பாக சந்தையில் முட்டை மற்றும் சீனியின் விலை அதிகரிப்பினால் எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் குறைந்த விலையில் கேக் கிடைக்கும் வாய்ப்பை மக்கள் இழக்க நேரிடும்.

கிறிஸ்மஸ் உள்ளிட்ட பண்டிகைக் காலம் முடியும் வரை இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி-5)

## நாட்டை விட்டு வெளியேறியுள்ள சுமார் 7 இலட்சம் பேர்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக கடந்த நான்கு வருடங்களில் நாட்டில் இருந்து பெருந்தொகையானோர் வெளியேறிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

7 இலட்சத்து 32 ஆயிரம் பேர் இவ்வாறு இலங்கையிலிருந்து கடந்த நான்கு வருடங்களில் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (நி-5)

## இலங்கை வர அனுமதி கோரும் மற்றுமொரு சீனக்கப்பல்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரியில் சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பல் இந்த நாட்டிற்கு வரவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்துஸ்தான் டைம்ஸ் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

'Xiang Yang Hong 03' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வுக் கப்பல் ஜனவரி 5ஆம் திகதி முதல் மே மாதம் வரை இந்தியப் பெருங்கடலில் ஆய்வுப் பணியில் ஈடுபடும் என குறித்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் இலங்கை மற்றும் மாலைதீவு துறைமுகங்களில் சீனக்கப்பல் நங்கூரமிடப்பட உள்ளதாகவும் அதற்காக இலங்கை அரசாங்கத்திடமும் மாலைதீவு அரசாங்கத்திடமும் சீன அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள இந்திய அரசாங்கம், குறித்த கப்பலுக்கு கடல் ஆய்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவது பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 355





நந்தினியும் அவருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டே, "என் மைத்துனர் இருக்கிறாரே, அவருக்கு இணையான புத்திக்கூர்மை படைத்தவர் இந்த ஈரேழு பதினாலு உலகத்திலும் கிடையாது!" என்றாள்.

"இன்னும் உன் மைத்துனன் என்ன சொல்கிறான் தெரியுமா? நல்ல வேடிக்கை! அதை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது! தஞ்சைக் கோட்டை வாசலில் நீ பல்லக்கில் வந்து கொண்டிருந்தபோது உன்னை அந்த இந்திரஜித்து சந்தித்துப் பேசினானாம். பிறகு இந்த அரண்மனைகுள்ளும் அந்த மாயாவி வந்திருந்தானாம். ஆகையால் நீயே அவனிடம் பழுவூர் இலட்சினையைக் கொடுத்திருக்கவேணுமாம்! அப்படியில்லாவிட்டால், உன்னிடம் யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருகிறானே, அவன் மூலமாக போயிருக்க வேண்டுமாம்! தன்னுடைய முட்டாள்த்தனத்தை மறைப்பதற்காக அவன் இப்படியெல்லாம் கற்பனை செய்து உளறுகிறான்!" என்று கூறிப் பழுவேட்டரையர் தமது நீண்ட பற்கள் எல்லாம் தெரியும்படியாக மறுபடியும் 'ஹஹஹா' என்று சிரித்தார்.

"என் மைத்துனருடைய அறிவுக் கூர்மையைப் பற்றி நான் சந்தேகித்தது ரொம்பத் தவறு. அவருடைய அறிவு உலக்கைக் கொழுந்துதான்! சந்தேகமில்லை! ஆனால் இதையெல்லாம் நீங்கள் கேட்டுக் கொண்டு சும்மா இருந்ததை நினைத்தால்தான் எனக்கு வியப்பாயிருக்கிறது!" என்றாள் நந்தினி. அவளுடைய முகபாவம் மறுபடியும் மாறி, அதில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தது. கண்ணில் தீப்பொறி பறந்தது.

வீராதி வீரரும் போர்க்களத்தில் எத்தனையோ வேல் வீச்சுக்களை இறுமாந்து தாங்கியவருமான பெரிய பழுவேட்டரையர் நந்தினியின் சிறு கோபத்தைத் தாங்க முடியாமல் தடுமாறினார். அவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் திடீரென்று ஒரு தளர்ச்சி காணப்பட்டது.

"தேவி! நான் அதையெல்லாம் சும்மா கேட்டுக் கொண்டிருந்தேன் என்றா நினைக்கிறாய்? அவனுடைய கையாலாகாத்தனத்தைப் பற்றி மிகக் கடுமையாகப் பேசி அவனை அழ வைத்து விட்டேன். நீ பார்த்திருந்தால் அவன் பேரில் இரக்கம் அடைந்திருப்பாய்!" என்றார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கந்தன்மாறன் பாடு சங்கடமாகி விட்டது. நந்தினியிடம் அவனுக்குச் சிறிது பயமும் பழுவேட்டரையரிடம் இரக்கமும் அவமதிப்பும் ஏற்பட்டன. இந்தச் சதிபதிகளின் தாம்பத்ய விவகாரத்தில் சிக்கிக்கொள்ளாமல் அங்கிருந்து போய்விட விரும்பினான். தொண்டையைக் கனைத்துக் கொண்டு "ஐயா!" என்றான்.

நந்தினி குறுக்கிட்டு "என் மைத்துனர் சாமர்த்தியத்தைப் பற்றிப் பேசுகையில் இவரை நாம் மறந்து விட்டோம். இவர் ஊருக்குப் போகிறேன் என்று சொல்கிறாரே, போகலாம் அல்லவா?" என்று கேட்டாள்.

"நன்றாய்ப் போகலாம். இத்தனை நாள் இங்கு இவன் தங்கியிருந்தது பற்றியே இவனுடைய தந்தை கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்!"

"இவரிடம் ஓலை ஒன்று கொடுத்தனுப்ப விரும்புகிறேன். கொடுக்கலாம் அல்லவா?"

"ஓலையா? யாருக்கு?"

"காஞ்சியிலுள்ள இளவரசருக்கு!"

பழுவேட்டரையர் நந்தினியையும் கந்தன்மாறனையும் சந்தேகக் கண்ணால் பார்த்து, "இளவரசருக்கு ஓலையா? நீயா எழுதுகிறாய்? எதற்கு?" என்று கேட்டார்.

"இளையபிராட்டி தம்பிக்கு ஓலை எழுதி இவர் சிநேகிதரிடம் அனுப்பியிருக்கிறார். பழுவூர் இளையராணி அண்ணனுக்கு ஏன் ஓலை எழுதக்கூடாது? எழுதி இவரிடம் ஏன் அனுப்பக் கூடாது?" என்றாள் நந்தினி.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காளைமாட்டின் பால்



சக்கரவர்த்தி அக்பருக்கு பீர்பாலை மிகவும் பிடித்திருந்தது. அதைக் கண்டு தர்பாரில் பலருக்கு பீர்பால் மீது பொறாமை ஏற்பட்டது. அவர்களில் அரண்மனை வைத்தியரான ஹகீம் ஜாலிம்கானும் ஒருவர். அவரும் பீர்பால் மீது பொறாமை கொண்ட மற்றவர்களும் பீர்பாலை சிக்கலில் ஆழ்த்த நல்லதொரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

ஒரு நாள் அக்பருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. உடனே அரண்மனை வைத்தியர் ஜாலிம்கான் அவசரமாக வரவழைக்கப்பட்டார். அவர் பரபரப்புடன் அரண்மனையில் நுழைந்து கொண்டிருக்கையில் பீர்பால் மீது பொறாமை கொண்டிருந்த சிலர் அவரை வழிமறித்தனர்.

"வழியை விடுங்கள். சக்கரவர்த்திக்கு உடல் சரியில்லை. நான் அவரை உடனே பார்க்க வேண்டும்" என்றார் ஜாலிம்கான்.

"நீங்கள் சக்கரவர்த்தியைப் பார்க்கப் போகிறீர்கள் என்பதால் தான் உங்களிடம் அவசரமாக வந்து இருக்கிறோம்" என்ற அவர்கள், "பீர்பாலைக் காலை வாரிவிட ஒரு அருமையான வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக்கிறது" என்றனர்.

"பீர்பாலை படுகுழியில் தள்ள நான் எது வேண்டுமானாலும் செய்யத் தயார்! உடனே சொல்லுங்கள்!" என்றார் ஜாலிம்கான்.

வயதான ஒருவர் ஜாலிம்கானின் காதில் தங்களுடைய ரகசியத் திட்டத்தைக் கூறினார். அதைக்கேட்டதும் ஜாலிம்கான் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தார். தனக்கு யோசனை கூறியவர்களுக்கு நன்றி தெரிவித்த பின், அக்பருக்கு சிகிச்சையளிக்கச் சென்றார். அக்பர் தனது படுக்கை அறையில் தலை வரை கம்பளியினால் போர்த்திக் கொண்டு முனகிக் கொண்டிருந்தார்.

'ஜாலிம்கான் அக்பரை கவனமாக சோதித்தார். அவருக்கு ஏற்பட்டிருப்பது சாதாரண காய்ச்சல்தான் என்று தெரிந்துவிட்டது. ஆனாலும் வெகுநேரம் அக்பரை சோதித்துப் பார்த்தபின், மிகவும் கவலைப்படுவது போல் சற்று நேரம் பாசாங்கு செய்தார். அதன் பிறகு அவர் அக்பரிடம், "பிரபு! உங்களுக்கு வந்திருப்பது விஷக்காய்ச்சல். அதற்கு மருந்து என்னிடம் இருக்கிறது. ஆனால் காளை மாட்டின் பாலுடன் சேர்த்து சாப்பிட்டால்தான் விரைவில் குணம் அடைவீர்கள் அதனால் தான் கவலைப்படுகிறேன்" என்றார்.

"காளை மாட்டின் பாலா?" என்று வியப்புடன் கேட்டார் அக்பர்.

"பால் தரும் காளை மாடுகளும் இருக்கின்றன பிரபு. ஆனால் அவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம்" என்றார் ஜாலிம்கான்.

"யார் அதைக் கண்டுபிடிப்பது?" என்று அக்பர் கவலையுடன் கேட்க, "ஏன் பிரபு? நமது பீர்பால் மிகவும் புத்திசாலி. அவரால் முடியாத காரியமே எதுவும் இல்லை" என்றார் ஜாலிம்கான்.

"பீர்பாலால் பால் தரும் காளை மாட்டை எப்படி கண்டுபிடிக்க முடியும்?" என்று அக்பர் சந்தேகத்துடன் ஜாலிம்கானிடம் கேட்டார். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி வாழ வேண்டும் என்று உனக்குத் தெரிந்தால் நீ பலகாலம் வாழலாம்.

– லாங்ஃபெலோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெள்ளப் பாதிப்பிலும் இனவாதம் செய்து விடாதீர்கள்

வட மாகாணத்தில் கடந்த ஒரு சில நாட்களாகப் பெய்த கடும் மழை காரணமாக மக்கள் இடம்பெயர வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதுடன் விவசாயச் செய்கையும் முற்றுமுழுதாகப் பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் கனத்த மழை காரணமாக வெள்ள அனர்த்தத்தைச் சந்தித்துள்ளன.

மழை வெள்ளம் காரணமாக குறித்த மாவட்டங்களில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் வேளாண் செய்கையும் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது.

இதுதவிர, கால்நடைகளின் இழப்புகளும் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் ஏற்பட்ட சொத்தழிவுகளும் மக்களைக் கடும் துன்பத்துக்கு ஆளாக்கியுள்ளன.

எனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குகின்ற அதேநேரம் வேளாண் செய்கையில் ஏற்பட்ட பாதிப்புகள், கால்நடை இழப்புகள், சொத்தழிவுகள் தொடர்பில் உரிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

பொதுவில் தமிழர் பிரதேசங்களில் எந்த அனர்த்தம் ஏற்பட்டாலும் அது தொடர்பில் அரசாங்கம் பாராமுகமாக இருப்பது வழமை.

தவிர, தமிழ் அரச அதிகாரிகளும் உரிய இழப்புகளைப் பதிவு செய்வதில் அசமந்தப் போக்கைப் பின்பற்றுவர்.

சிலவேளைகளில் பாதிப்பு ஏற்பட்டவர்களைப் பதிவு செய்யாமல், எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாதவர்களைச் செல்வாக்கின் அடிப்படையில் பதிவு செய்து, அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கின்ற அக்கிரமங்களும் நடைமுறையில் உண்டு.

எனவே மேற்குறிப்பிட்ட அநீதிகள் நடக்காமல் பார்த்துக் கொள்வதுடன் ஏற்பட்ட இழப்பீடுகளைச் சரியாகவும் உண்மையாகவும் மதிப்பீடு செய்து பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை கிடைப்பதை சம்பந்தப்பட்டவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இதற்கும் மேலாக, வெள்ளப் பாதிப்பால் வடமாகாணத்தில் ஏற்பட்ட இழப்பீடுகள் தொடர்பான விபரங்களுடன் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நிலைமையைத் தெளிவுபடுத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளுக்கான நிவாரணம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இதைவிடுத்து பாராளுமன்றத்தில் ஆளில்லாத கதிரைகளுக்கு உரையாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது என்பதையும் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே முக்கியமான சம்பவங்கள் தொடர்பில் உடனுக்குடன் ஜனாதிபதியைச் சந்தித்து அவரின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு வருவது மிகவும் அவசியம்.

## வற்வரி அதிகரிப்பினால்
# வாகன உதிரிப் பாகங்களின் விலை பன்மடங்கு உயர்வடையும்

(கொழும்பு)

வற் வரி 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் வாகன உதிரிப் பாகங்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வடையும் என வாகன உதிரி பாகங்கள் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகன உதிரிப் பாகங்களின் விலைகள் இருமடங்காக அதிகரிக்கும் எனவும் இறக்குமதியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வற் வரி அதிகரிப்பு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் நிலையில், சில விநியோகஸ்தர்கள் தற்போதே வாகன உதிரிப்பாகங்களை அதிக விலைக்கு விற்பனையாளர்களுக்கு வழங்குவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாத விலையைவிட சில உதிரிப் பாகங்களின் விலைகள் இம்மாத இறுதியில் பாரிய அளவில் உயர்வடைந்துள்ளன. 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட உதிரி பாகமொன்றின் விலை தற்போதே 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக வாகன உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

ஜனவரி முதல் இதனையும் விட பல மடங்கு விலைகள் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதால் வாகன உரிமையாளர்கள் பெரும் கவலை அடைந்துள்ளதுடன், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரிப்பதால் வாகனங்கள் சரியான நேரத்தில் பழுது பார்க்க முடிவதில்லை என கூறும் வாகன உரிமையாளர்கள், இதனால் விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் கூறுகின்றனர்.

2020ஆம் ஆண்டு முதல் புதிய வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இன்னமும் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் முழுமையாக தளர்த்தப்படவில்லை. சில அத்தியாவசியமான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாகன உதிரிப் பாகங்களின் விலைகளும் அதிகரித்து வருவதால் வாகனங்களை பராமரிப்பதில் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன. (ம-7)

# பல்கலைக்கழகங்களில் விரைவில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும்
## உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் மானிடவியல் துறையில் விரைவில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

மேலும், பிராந்தியத்திலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்படும் புதிய கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்வதற்காக தேசிய உயர்கல்வி அதிகாரசபை ஒன்றை நிறுவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்,

"கல்வி மற்றும் உயர் கல்வித் துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதன் ஊடாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் மானிடவியல் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். அதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்றை அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, பிராந்தியத்திலும் சர்வதேச அளவிலும் ஏனைய நாடுகளில் இடம்பெறும் புதிய கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள தேசிய உயர்கல்வி அதிகாரசபை ஒன்றை நிறுவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இது 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளப்பட உள்ளது. பல்கலைக்கழக நிர்வாகத்தை ஓரிடத்திற்கு கொண்டு வருவது இதன் இன்னுமொரு நோக்கம் என்பதையும் கூற வேண்டும் என்றார். (ம-7)

# வடக்கு ஆளுநரைச் சந்தித்த ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கொண்ட குழுவினர்கள் வடமாகாண ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பானது நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு, புதிய அதிபர்களின் நியமனங்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் பற்றி வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்சங்க உறுப்பினர் உள்ளிட்ட 5க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** அச்சுவேலி தொழிற்பேட்டை - எண்ணெய் தொழிற்சாலை, ஆவரங்கால் திருமண மண்டபம், அச்சுவேலி தொழிற்பேட்டை, விக்கிரமராச்சி பிறைவேற் லிமிட்டட்- புன்னாலைக் கட்டுவன், தவமயா - ஈவினை, ஜான்ட்ரா [illegible] நாகம், ஆவரங்கால் சந்தை, ஆவரங்கால் சிவன் கோவில், ஏழாலை, ஈவினை, அச்சுவேலி, புத்தூர், கற்பகம் ஊறெழு, குட்டியப்புலம், குப்பிழான், மஸ்கன்வீதி, ஈவினை, மயிலங்காடு, என்.கே திருமண மண்டபம் ஊரெழு பிள்ளையார், நாவற்காடு, நிலாவரை, பெரிய பொக்கணை, புன்னாலைக்கட்டுவன், புத்தூர், இராஜவீதி நவக்கிரி, சிறுப்பிட்டிமேற்கு - வைரவர்கோவிலடி, சூறாவத்தை சுன்னாகம், புகையிரத நிலைய வீதி மணியம் கடை [illegible] தோப்பு [illegible] ஊறணி, வாகையடி, வாதரவத்தை, வீரவாணி ஞானம்ஸ் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கி (மின்சார நிலைய வீதி), ஐபிசி தமிழ், LOLC, மக்கள் வங்கி ஸ்டான்லி வீதி, ராஜா தியேட்டர், போதனா மருத்துவமனை அவசர பிரிவு, பி.சி.சி.ஏ.எஸ் கல்லூரி, கஜமுகன் வன்பொருள் வளாகம், கமலேஸ்வரி, லதுசியா நந்த் விடுதி, லிங்கம் கிறீம் ஹவுஸ், என்.எஸ்.ஆர் வளாகம், சிவராதா புடவையகம், ரொப்பாஸ் மற்றும் அன்னை நாகா பூட்சிற்றி, ஆரியகுளம்- பருத்தித்துறை வீதி, பேருந்து நிலையம், மணிக்கூட்டு கோபுர வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, பேருந்து நிலையம், பழைய தபால் அலுவலக ஒழுங்கை, ஸ்ரானலி வீதி, பிஸாஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, றொசல் கட்டடம் வெலிண்டன் சந்தி ஆரியகுளம் சந்தி, விக்டோரியா வீதி, விலிங்டன், வின்சர் பலாலி வைத்திய சாலை, கட்டுவன், கட்டுவன்புலம், குரும்பசிட்டி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஹோட்டல்- ஓவியா, வசந்தி தியேட்டர், 1 ஆவது குறுக்குத்தெரு, ஒஸ்ரியா ஸ்ரூடியோ, பஜார் வீதி, இலுப்பையடி சந்தி, கந்தசாமி கோவில் வீதி குகன் மோட்டார்கள், 2 ஆவது குறுக்குத்தெரு, மில்வீதி சந்தி, நெல்லி ஸ்ரார் விடுதி, பொலிஸ் நிலையம், இறம்பைக் குளம், சூசைப்பிள்ளையார் குளம், ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

15




கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


இதனால் அப்பாவிப் பொது மக்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த நாடும் பாதிக்கப்படுகின்றது. எனவே இதனை இல்லாதொழிக்க இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான தண்டனைகளை வழங்குதல் வேண்டும். அதனூடாக சமூகத்தை நேர்வழிப்படுத்தலாம்.

இதன் அடிப்படையில் வழக்கு விசாரணை நிறைவில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கிஹான் குலதுங்க, இன்று இலஞ்ச குற்றம் சமுதாயத்தில் ஒரு புற்றுநோயாக மாறியிருப்பதாகவும் இதனை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதுடன் மேற்படி குற்றவாளிக்கான தீர்ப்பினை வழங்கினார்.

**15. இலஞ்சம் பெற்ற மிருக வைத்திய அலுவலக பரிசோதகருக்கு 3 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

மஸ்கெலியா மிருக வைத்திய அலுவலக பரிசோதகர் ஒருவர் முறைப்பாட்டாளரிடமிருந்து இருந்து ரூ. 5000.00 இலஞ்சமாக கோரிப் பெற்றுக் கொண்டமைக்காக மிருக வைத்திய அலுவலக பரிசோதகருக்கு 3 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூ 5000.00 அபராதமும் விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

விவசாயியான முறைப்பாட்டாளர் மாடுகளை எடுத்துச் செல்வதற்கான அனுமதியை பெறமுனைந்த வேளை, அதனை வழங்குவதற்கு முறைப்பாட்டாளரிடமிருந்து 5000.00 ரூபாவினை இலஞ்சமாக கோரியதுடன் தொடர்புடைய முறைப்பாட்டின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த மிருக வைத்திய அலுவலக பரிசோதகரை கைது செய்து மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தனர்.

விசாரணையின் போது மிருக வைத்திய திணைக்கள அலுவலர்கள் வைத்தியர்களும் சாட்சிகளை வழங்கினர்.

**16. கடற்படை பொறியியலாளருக்கு ரூபா 35 இலட்சம் தண்டம் விதித்துத் தீர்ப்பு (2018)**

குற்றஞ்சாட்டப்பட்டவரினால் 2005.03.31 தொடக்கம் 2006.03.31 வரையான காலப்பகுதியில் சுமார் ரூபா 35 இலட்சங்களை அவருடைய அறியப்பட்ட வருமானத்திற்கு அப்பால் செலவு செய்தமை அல்லது முறையற்ற விதத்தில் சொத்து சேர்த்தமை தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் குற்றவாளியான கடற்படையின் உதவி பொறியியலாளர் ரூபா 35 இலட்சம் தண்டம் விதித்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதியினால் தீர்ப்பளிக்கப்பட்டார்.

**முன்னாள் ஜனாதிபதியின் தலைமைப்பணியாளர் மீதான குற்றத்தீர்ப்பு**

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) பாராட்டு**

விசேட மேல்நீதிமன்றத்தின் விசாரணையில் முன்னாள் ஜனாதிபதியின் தலைமைப்பணியாளர் ஐ.எச். கே. மஹாநாம மற்றும் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தவிசாளர் பீ.திசாநாயக்க ஆகிய இருவர் மீதும் முறையே 20 வருடம் மற்றும் 12 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்பை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) வரவேற்கிறது. மேற்குறித்த இருவரும் இந்திய வர்த்தகரிடமிருந்து 100 மில்லியன் ரூபாய் பெறுமதியான பணத்தை இலஞ்சமாகப் பெறுவதற்கு இணங்கி அதில் 20 மில்லியன் பணத்தை முற்பணமாகப் பெற்றுக் கொண்டமைக்காக குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் ஊழல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவினால் (CIABOC) மேற்கொள்ளப்பட்ட முன்னோடியான அதிரடி நடவடிக்கை மற்றும் பூரண விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றின் முன்வழக்குத் தொடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பவற்றை TISL பாராட்ட விரும்புகிறது.

TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக்க ஒபேயசேகர தெரிவிக்கும் போது "வெற்றிகரமான நீதி விசாரணையின் முக்கிய பாகமாக இருப்பது புலனாய்வுத்துறையினரின் விசாரணையாகும். அவர்கள் அரசியல் தலையீடுகள் இன்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். குற்றவாளிகளது தராதரத்தைக் கருத்தில் கொள்ளாது CIABOC அதிரடி நடிவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது எமக்கு நம்பிக்கையைத் தரும். அதேவேளை எதிர்காலத்திலும் இவ்வாறாக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான முன்னுதாரணமாக இதனைக் கொள்ளவேண்டும்" எனக்கூறினார்.

அசோக்க ஒபேயசேகர மேலும் தெரிவிக்கையில் "ஏனைய வழக்குகள் சாதாரண குற்றவியல் நடபடி முறைகளூடாக 10 வருடங்கள் வரை இழுத்தடிக்கப்படும். அதேநேரம் குறிப்பிட்ட சில வழக்குகள் விசேட நீதிமன்றினூடாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றிய தெளிவை பொதுமக்களுக்கு வழங்கியிருப்பதுடன் குறித்த நடவடிக்கைகள் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது." எனக் கூறினார்.

அரச மரக்கூட்டுத்தாபனத்தினது தவிசாளர் மீது விதிக்கப்பட்டுள்ள குற்றத்தீர்ப்பானது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOEs) மீதுள்ள ஊழல் அபாயங்களை சுட்டிக்காட்டுவதுடன் அந்நிறுவனங்கள் தொழில் தர்மத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் கோடிட்டுக்காட்டுகிறது. அத்துடன் அரசு சொந்தான தொழில் நிறுவனங்களினது நியமனங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ள அதேவேளை நிர்வாக சபை பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைக்க செய்வதுடன் அவர்களுக்குள்ள அரசியல் தொடர்புகளை வெளிப்படுத்துவது முக்கிய அம்சமாகும்.

**இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் தொழிற்பாடு பற்றி மக்களின் கருத்துகள்**

**இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் 79 வழக்குகள்மீளப்பெறப் பட்டுள்ளன.**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு சர்ச்சையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய வழக்குகளை வாபஸ் பெறுதல், வழக்குகளை தாக்கல் செய்வதில் காணப்படும் தாமதம் போன்ற விடயங்கள் இவற்றில் முக்கியமாகும்.

இவற்றில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அரசியல்வாதிகள், அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதிராக 2010 - 2021 காலப்பகுதிக்குள் 85 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு உத்தியோகத்தர், பிரதிப் பணிப்பாளர் நாயகம் திருமதி. சுனேத்திரா ஜயசிங்ஹ வழங்கிய (BC/PR/06/அறிக்கை) தகவல்களிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

21.02.2022 ஆம் திகதி தகவல் அதிகாரிக்கு மின்னஞ்சல் ஊடாக முன்வைக்கப்பட்ட தகவல் கோரிக்கைக்கு எவ்வித பதிலும் வழங்கப்படாத நிலையில் 04.05.2022 ஆம் திகதி குறித்தளிக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. எனினும் அவற்றுக்கும் பதில் வழங்கப்படாததால் 06.06.2022 ஆம் திகதி தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது.

தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவினால் (RTIC/Appeal/864/2022) குறித்த மேன்முறையீடு 16.11.2022 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 22.02.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தகவல் கோரிக்கைக்கு உரிய தகவல்களை வழங்குமாறு ஆணைக்குழுவினால் உத்தரவிடப்பட்டது.

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தும் சட்டத்தின் மூலம் குற்றங்கள் தொடர்பில் அதிகாரம் வழங்கும் வகையில் நிரந்தரமான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினை உருவாக்கும் பொருட்டு 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முதலாவது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் 1994 ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமானது. புலனாய்தல், வழக்கிடுதல் மற்றும் தவிர்த்தலுக்காகச் செயற்படுதல் என்பன ஆணைக் குழுவின் செயற்பாடுகளாக இருக்கின்றன.

**நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் 2010 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 767 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மேல்நீதிமன்றத்தில் 550 வழக்குகளும் நீதிவான் நீதிமன்றத்தில் 217 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

பரபுரம், கற்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் இளம் குடும்பஸ்தர் காணப்பட்டதை அவதானித்த உறவினர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த குடும்பஸ்தரின் சடலத்தை மீட்டனர்.

குறித்த குடும்பஸ்தர் தனது பிள்ளையின் தொட்டிலில் கட்டப்பட்ட சேலையில் தூக்கிட்டு தொங்கியிருந்த நிலையிலேயே மீட்கப்பட்டார்.

அதேபகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 39 வயதுடைய கதிரேவேலு சஞ்சீவ காந்தி என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (ம-7,250)

## அத்தியாவசிய...

அதன்படி, பால் மா ரூ.10 இனாலும், இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன் (425 கிராம்) ரூ. 55இனாலும்,155 கிராம் இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன் 10 ரூபாயினாலும், 425 கிராம் உள்நாட்டு டின்மீன் 20 ரூபாயினாலும்,உள்ளூர் உருளைக்கிழங்கு 15 ரூபாயினாலும், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 15 ரூபாயினாலும், கொண்டைக்கடலை 5 ரூபாயினாலும் விலைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## தோட்டக்...

கதிர்காமநாதன் நிரோசன் (வயது-29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 13ஆம் திகதி 4 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞனை உறவினர்கள் தேடி வந்த நிலையில் தோட்டக் கிணற்றில் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,104)

## வடக்கு மாகாண...

சுகாதார பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

0761799901 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு நேரடியாக தொடர்பு கொண்டும் வட்ஸப்மூலமாகவும் முறையிட முடியும். முறைப்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7,33)

## பெரமுனவின்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 ஆவது மாநாட்டில் மகிந்த ராஜபக்ஷவின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே முன்மொழிந்ததோடு, அதனை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வழிமொழிந்தார்.

அதன் பிறகு, பேரவையில் இருந்த கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவு பொது மாநாட்டில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. (ம-7)

## மன்னாரில்...

யாழ்ப்பாணம் பிரதான வீதி ஊடான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக பாலியாறு, சிப்பியாறு, முழுவதும் நிறைந்து வீதிக்கு மேலாக நீர் பாய்ந்து வருவதுடன் அருகில் உள்ள கிராமங்கள் முழுவதுமாக வெள்ளப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆட்காட்டி வெளி மற்றும் மாந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வயல் நிலங்கள் முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

அதேநேரம் மன்னார் பிரதேச செயலக பிரிவில் கடும் மழை காரணமாக ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், சாந்திபுரம் போன்ற கிராமங்களும் தீவுக்கு வெளியில் தேத்தாவாடி, தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி போன்ற கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளது.

தொடர்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவும் பட்சத்தில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்படும். (ம-7,285)

## வட மாகாணத்தில்...

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார், வவுனியாவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது. ஏனைய பிரதேசங்களில் இன்று பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

தென், ஊவா, மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் சுமார் 100 மில்லி மீற்றர் வரையான பலத்த மழை பெய்யக்கூடும்.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான வானிலை காணப்படும்.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைப்பதற்கு, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களிடம் கோரியுள்ளது. (ம-7)

## அனைத்து...

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அவர்கள் "வல்லமையுள்ளவர்கள்" ஆக இருந்தாலும் அப்படித்தான் நடந்து கொள்வேன் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பொலிஸ் செயலமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் டிரான் அலஸ் இதனை தெரிவித்துள்ளார்.

''2024ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர், அனைத்து மாகாணங்களிலும் குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு பாரிய மாற்றத்தை கொண்டு வர எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது சமூக வலைத்தளங்களில் சிலர் ஆத்திரமடைந்து என்னை தாக்கி வருகின்றனர். இவை அனைத்தும் போதைப் பொருள் பணத்தில் இடம்பெறும் சம்பவங்களாகும்.

அதற்கு அஞ்சி எமது பணிகளை நிறுத்தப்போவதில்லை. இலக்கை அடையும் வரை அதற்கான செயற்பாடுகள் இடம்பெறும்.

பொலிஸாருக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்குத் துணை நிற்பேன்' எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். (ம-7)

## கஜேந்திர...

நேரில் ஆராயச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எதிராக, திம்புலாகல, திவுலபத்தனை கிராமங்களில் உள்ள சிங்களக் குடியேற்ற வாசிகள் குழு வளமண்டி பாலத்தை மறித்து எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை கஜேந்திரகுமாரை பயணிக்க அனுமதிக்காததால், சுமார் ஒன்றரை மணி நேரம் அவர் வள மண்டி பாலத்திற்கு அருகில் வாகனத்துக்கு உள்ளேயே இருக்க நேரிட்டது. சிங்களக் குடியேற்றவாசிகளின் கூச்சல்களுக்கு மத்தியில் அவர் திரும்பிச் சென்றார்.

அம்பிட்டிய சுமனரதன தேரர் மற்றும் பொல்கஹ அரவ பிரதேசத்தைச் சேர்ந்த தேரர் உட்பட பெருந்தொகையான சிங்கள மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அரசியல்வாதி இனவாதத்தை தூண்டி தமது பயிர்செய்கை நிலத்தை தடை செய்ய வந்துள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தினர். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.15
சீட்டிழுப்பு இலக்கம் 0155
T 6 2 2 8 0 2 T
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1359
G 36 40 70 71 G
Double Chance 45463

மெகா பவர்
திகதி 15/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1677
V 15 33 49 58 70
71707

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.15
சீட்டிழுப்பு இலக்கம் 0638
கடகம் 13 21 33 39 கடகம்
32144 02

மஹஜன சம்பத
திகதி 2023/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 5329
Y 8 7 4 0 8 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3571
சீட்டிழுப்பு திகதி | 15.12.2023
T 36 40 50 72
T 04279
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
அட பிட சம்பத
15.12.2023 வெற்றி வாரம் 037
N 4 9 0 4 1 9
89509
23,975,099.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2303 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.15 தினம் வெள்ளிக்கிழமை
07 21 33 69 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,619,612/-
82172

சனிதா
2023.12.15 வெற்றி வாரம் 4464 வர்ணம் செம்மஞ்சள்
05 35 61 68 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,946,580.00
29197

சசிரி SASIRI
415
2023.12.15
13 | 41 | 47
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,731,960/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4015 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.15 தினம் வெள்ளிக்கிழமை
04 07 14 61 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,715,472/-
538611

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 17 31 43 45 57
1479
2023.12.15 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 477,910,184.20
DLB

வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,346,288/-
வெற்றி வாரம் : 2129
சீட்டிழுப்பு திகதி : 2023.12.15
அட கோடிபதி ADA KOTIPATHI
57 70 74 75 G
881040


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலைவாய்ப்பு

1. காசாளர்
2. காட்சியறை முகாமையாளர்கள்
3. விற்பனை உதவியாளர்கள்
4. களஞ்சிய பொறுப்பாளர்கள்
5. களஞ்சிய உதவியாளர்கள்
6. அலுவலக உதவியாளர்கள்

(C-7905)

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரத்தை **077 310 7823** என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

# தையல் மெஷின் தேவை

பாவித்த சிங்கர் தையல் மெஷின் (கறுப்பு மெஷின் மட்டும்) தேவை. விற்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும். (18243)

**070 535 4101**

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**

**076 097 3127**

# FLIGHT TICKETS BOOKINGS

- அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களினை சிறந்த விலையில் கொள்வனவு செய்ய எம்மை நாடுங்கள்
- இந்தியா விசா சேவைகள்
- கனடா, லண்டன், அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான ரிக்கற் முன்பதிவுகள்

## Apex Travels

**0777 597 598/ 076 3333 644**

No.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (18247)

# வாருங்கள்... விடுதலைப் பெருவிழா இலவசம்...

**கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள், பரம்பரை சாபங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து**

## இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

**15 16,17 டிசம்பர் 2023 4.00Pm** (18170)

15ஆம் திகதி ஒளிவிழா நிகழ்வும், 16ஆம் 17ஆம் திகதிகளில் சுகமளிக்கும் ஆராதனையும் நடைபெறும்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, 673, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

# விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (18234)

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**070 375 0002**

# உடனடி வேலை வாய்ப்பு

## நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7913)

## V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

# காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 22 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18244)

**077 468 3354,076 755 8606**

# CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7913)

**0777-068-777**

49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

# Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

## VISA CONSULTANT

134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna. (18233)

**077 038 5584**

# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

## பொது சத்திரசிகிச்சை நிபுணர்

DR.S.மதிவாணன்
MBBS, MD SURGERY, MRCS (ENG),
FELLOWSHIP IN VASCULAR IN GENERAL SURGERY (UK)
CONSULTANT SURGEON
BOARD CERTIFIED IN GENERAL SURGERY WITH VASCULAR INTEREST

திங்கள் மற்றும் சனி கிழமைகளில் 4.30 PM

## சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்

### விசேட குருதிக்குழாய் சத்திரசிகிச்சை கிளினிக்

- ஆறாத புண்களுக்கான சிகிச்சை
- கால் இரத்த நாள் (வரிக்கோஸ்) வீக்கத்திற்கான சிறப்பு சிகிச்சை
- கால் வீக்கத்திற்கான சிகிச்சை
- நீரிழிவுநோயின் பின்னர் கால்களை பரிசீலித்தலும் தீர்வு வழங்குதலும்

### பொது சத்திரசிகிச்சை

- மார்பு கட்டிகள், நீர கட்டிகள்
- வயிற்று நோவு
- தைரெயிட் பிரச்சினைகள்
- பித்தப்பை உபாதைகள்
- கேணியா (குடலிறக்கம்)
- மலவாசல் இரத்தக்கசிவுகளுக்கான ஆலோசனைகளும் தீர்வுகளும்

(C-7907)

முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212255157

# Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 285/= (Max 3Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 300/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 173/= |
| 1 Kg அரிசி மா | - 199/= |
| 450g அங்கர் பால்மா | - 1030/= ~~(1080/=)~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435/= ~~(3900/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= ~~(330/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(430/=)~~ |
| 500ml Vim Liquid | - 390/= ~~(425/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |

1030/= Anchor ~~1080/-~~

(18246)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

## புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் (CONSULTANT SURGICAL ONCOLOGIST)

# Dr.G.Sritharan

திங்கள்,புதன்,வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் 5.00 PM

சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் 2.00 PM

## புற்றுநோய் அறுவை சிகிச்சை சேவை

முதல் 25 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக வழங்கப்படும்

## புற்றுநோய் பரிசோதனை

- மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் மார்பு மீள்உருவாக்க சிகிச்சைகள்
- வாய் புற்றுநோய் பரிசோதனை
- குடல் புற்றுநோய் பரிசோதனை
- உணவுக்குழாய் மற்றும் வயிற்றுப் புற்றுநோய் பரிசோதனை
- கழுத்து புற்றுநோய் (தைரொயிட்) பரிசோதனை
- அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கான வேறு குறிப்பிட்ட பரிசோதனைகள்

(C-7908)

முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212255157

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.